# வலை

விடை தெரிந்தோ, தெரியாமலோ
தொடர்ந்து புதிர் போடும் வாழ்க்கை;
எடுத்தால் எடு, விட்டால் விடு என்று
சீண்டிச் சவால் விடும் வாழ்க்கை;

புதிர் புரிந்தோ, புரியாமலோ
அவிழ்க்கிறேன் என்று போய்
தன்னைச் சுற்றி தானே
பின்னிக் கொள்ளும் ஓர் மாயவலை;

ஆசையும், விரக்தியும் ஒரு புறம்
வெறுப்பும், சுயவிமர்சனமும் ஒரு புறம்
குழம்பிய மனக்குட்டையில் விடைமீன் பிடிக்க
தொடர்ந்து பின்னும் ஓர் மாயவலை...

அ. சோ
பெங்களூர்
31 மார்ச் 2018.